கோவை சரக சிறைத்துறை துணைத்தலைவரின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை - திரு.க.சண்முக சுந்தரம், எம்.ஏ.,

''''

எண். 1646/முஉ./2021 நாள்.22.04.2021.

பொருள் - சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை - திரு.ப.விஜயகுமார், இளநிலை உதவியாளர், மத்திய சிறை, கோவை என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறைப் படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை -1) அரசாணை(நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)துறை, நாள்.26.02.2021.
2) தலைமையலுவலக கடித எண்.12316/இஎஸ்.2/2021, நாள்.07.04.2021.
3) கோவை மத்திய சிறை கண்காணிப்பாளரின் கடித எண். 9338/பொ1/2019, நாள்.19.04.2021.

((()))

திரு.ப.விஜயகுமார் த/பெ.பன்னீர் செல்வம் (லேட்) என்பவர் கருணை அடிப்படையில் கோவை மத்திய சிறையில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமிக்கப்பட்டு 01.07.2019 அன்று முற்பகலில் பணியில் சேர்ந்துள்ளார். இவரது கல்விச்சான்று மற்றும் சாதிச்சான்றின் உண்மைத்தன்மை அடிப்படையிலும், பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணை/ காவல்துறை இயக்குநர்/ சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் தலைமை இயக்குநரின் குறிப்பாணை ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படியும், மேற்படி பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 01.07.2019 முற்பகல் முதல் இவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்விபரத்தை மேற்படி பணியாளரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து விட்டு அதன் விபரத்தினை தெரிவித்திடவும், பணிப்பதிவேட்டினை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளித்திடவும் சிறை கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு- பணிப்பதிவேடு.

சிறைத்துறை துணைத்தலைவர்,
கோவை சரகம், கோவை.

22/4/21

பெறுநர்
சிறை கண்காணிப்பாளர்,
மத்திய சிறை,
கோவை.

Sir,
Received ① copy
27/4/2021